உலக புகையிலை எதிர்ப்பு தின விழிப்புணர்வு பேரணி

▶ தாராபுரத்தில் புகையிலை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தாராபுரம், மே 31: உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தாராபுரத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை சார்பில் தமிழ்நாடு அரசு புகையிலை கட்டுப்பாடு மையத்தின் அறிவுறுத்தலில் விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொது மக்களிடையே தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் பீடி, சிகரெட்களை பயன்படுத்துவதை தவிர்ப்போம் என விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில், பொன்னாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய தலைமை மருத்துவர் தேன்மொழி தலைமை வகித்தார்.

முன்னதாக பேரணி வட்டாட்சியர் அலுவலகம் சாலை, சர்ச் சாலை, அண்ணா சிலை பகுதி உள்ளிட்ட முக்கிய வீதிகளின் வழியாக சென்று தாராபுரம் தாய் சேய் நல விடுதியின் முன்பு நிறைவடைந்தது. இதில், பொது சுகாதாரத் துறை மேற்பார்வையாளர் வடிவேல், ஆய்வாளர்கள் நவீன், தனபால், மருத்துவர்கள் பிளிப் பாஸ்கர் மற்றும் மருத்துவத்துறை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

காங்கயம் அருகே போலீஸ் எனக்கூறி

தொழிலாளியிடம் வழிப்பறி செய்த வாலிபர் கைது

காங்கயம், மே 31: திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே சாவடிபாளையத்தை சேர்ந்தவர் நவீன்குமார் (30). லேத் தொழிலாளி. இவர் கடந்த வாரம் படியூர் அருகே ஓட்டப்பாளையம் டாஸ்மாக் பகுதியில் பைக்கில் சென்றுள்ளார். அப்போது அங்கு பைக்கில் வந்த வாலிபர் ஒருவர் நவீன்குமார் ஓட்டி வந்த பைக்கை மறித்துள்ளார்.

பின்பு அந்த நபர் தன்னை போலீஸ் எனவும், காங்கயம் கிரைம் பிரிவில் வேலை பார்ப்பதாக கூறி நவீன்குமார் ஓட்டி வந்த பைக்கிற்கான ஆவணங்களை கேட்டுள்ளார். இது குறித்து ஏற்பட்ட வாக்கு வாதத்தில் வாலிபர் நவீன்குமாரை தாக்கி, அவரிடம் இருந்த செல்போன் மற்றும் பணம் ரூ.5,400 மற்றும் பைக் சாவி ஆகியவற்றை பறித்து சென்றுள்ளார்.

பின்பு நவீன்குமாருக்கு வாலிபரின் நடத்தையில் சந்தேகம் இருந்ததால் காங்கயம் போலீசில் இது குறித்து புகார் அளித்துள்ளார். தொடர்ந்து காங்கயம் போலீசார் விசாரணை மேற்கொண்டதில், தொழிலாளியிடம் செல்போன் மற்றும் பணம் பறித்தது காங்கயம் அருகே ஓலப்பாளையத்தை சேர்ந்த அன்பழகன் என்கிற போலீஸ் அன்பு (25) என்பதும், இவர் காங்கயம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் பணியாற்றும் காவலர்களுக்கு உதவியாக பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் பிரிவில் இருந்ததும் தெரியவந்தது.

மேலும் போலீஸ் எனக்கூறி காங்கயம் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த 6 மாதங்களாக இரவு நேரங்களில் தனியாக பைக்கில் வருபவர்களை மடக்கி போலீஸ் எனக்கூறி பணம் பறித்து வந்ததும், மளிகைக் கடைகளில் போலீஸ் எனக்கூறி சோதனை நடத்தி வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அன்பழகன் என்கிற போலீஸ் அன்புவை கைது செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். காங்கயம் பகுதியில் போலீஸ் எனக்கூறி வாலிபர் ஒருவர் பணம் பறித்து கைதான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜெம் மருத்துவமனையின் இலவச மருத்துவ முகாம்

வெள்ளக்கோவிலில் நாளை நடக்கிறது

திருப்பூர், மே 31: கோவை ஜெம் மருத்துவமனை, வெள்ளக்கோவில் அரிமா சங்கம் இணைந்து வயிற்றுக்கோளாறு, மலக்குடல், பெருங்குடல், கல்லீரல், கர்ப்பப்பை கோளாறுகள், குடலிறக்கம், குடல் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம் நாளை (ஜூன் 1-ம் தேதி) நடக்கிறது.

இந்த மருத்துவ முகாம் வெள்ளக்கோவில் வீரக்குமார் கோயில் அரசு நடுநிலைப்பள்ளியில் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடக்கிறது. இதில், வெள்ளக்கோவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானபிரகாசம், ஜெம் மருத்துவமனை குடல் நோய் மருத்துவர்கள் சத்தியமூர்த்தி, ஹரீஷ் ஆகியோர் முன்னிலையில் நடக்கிறது.

இந்த முகாமில், வயிற்றுக்கோளாறு, மலக்குடல், பெருங்குடல், கல்லீரல், குடலிறக்கம், கர்ப்பப்பை கோளாறுகள், குடல் தொடர்பான அனைத்து நோய்களுக்கும் இலவச ஆலோசனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஸ்கேன் மற்றும் எண்டோஸ்கோப்பி தேவைப்படுபவர்களுக்கு மட்டும் இலவசம். பரிசோதனை தேவைப்படுவோர் காலை உணவு அருந்தாமல் வெறும் வயிற்றில் வரவும். பரிசோதனை முகாமில் பங்கேற்கும் நபர்களுக்கு மருந்து மாத்திரைகள் இலவசம், அறுவை சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு 50 சதவீத சிறப்பு சலுகை வழங்கப்படும்.

பனியன் தொழிலாளியிடம் செல்போன் பறித்த வாலிபர் சிக்கினார்

திருப்பூர், மே 31: பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் தர்மேந்திர பிரதாப். இவர், திருப்பூரை அடுத்த கணியாம்பூண்டி பகுதியில் கடந்த 10 ஆண்டுகளாக தங்கி பனியன் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். கடந்த பிப்ரவரி மாதம் தர்மேந்திர பிரதாப் அப்பகுதியில் உள்ள டாஸ்மாக் பாரில் மது குடிக்க சென்றபோது, முன்பின் அறிமுகம் இல்லாத வாலிபர் ஒருவர் வந்து அவரிடம் பேச்சுக் கொடுத்துள்ளார்.

பின்னர், நைசாக பேசி தர்மேந்திர பிரதாப்பின் செல்போனை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றார். இது குறித்து அவர் கொடுத்த புகாரின் பேரில் திருமுருகன்பூண்டி போலீசார் கண்காணிப்பு கேமரா காட்சி அடிப்படையில் அந்த வாலிபரை பிடிக்க முயற்சி செய்தனர். ஆனால், அந்த நபர் செல்போன் மற்றும் பைக்கை விட்டுவிட்டு தப்பி ஓடி விட்டார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் தப்பியோடிய அந்த வாலிபரை தேடி வந்தனர். இந்நிலையில், அந்த வாலிபர் ஈரோடு மாவட்டம் பவானிசாகரை சேர்ந்த கவியரசு (26) என்பதும், அவர் கோவை மாவட்டம் அன்னூரில் பதுங்கி இருப்பதும் தனிப்படை போலீசாருக்கு தெரிய வந்தது.

இதையடுத்து நேற்று போலீசார் அன்னூரில் வைத்து கவியரசுவை மடக்கி பிடித்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கவியரசு மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் இருப்பதும், அவர் தேடப்படும் குற்றவாளி என்பதும் போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பிரபல வழிப்பறி கொள்ளையன் கைது

உடுமலை, மே 31: உடுமலை அருகே 16 வழக்குகளில் தொடர்புடைய பிரபல கொள்ளையனை போலீசார் கைது செய்தனர்.

உடுமலை இந்திரா நகரில் வசிக்கும் சின்னம்மாள் (60) கடந்த 26ம் தேதி மாலை தன் வீட்டு முன்பு பாத்திரம் கழுவி கொண்டிருந்தார். அப்போது அங்கு இரு சக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து வந்த ஒரு நபர் சின்னம்மாளிடம் தண்ணீர் கேட்பதுபோல் கேட்டு திடீரென அவரது கழுத்திலிருந்த சுமார் 5 பவுன் தங்க சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பினார். இச்சம்பவம் குறித்து உடுமலை போலீஸ் நிலையத்தில் சின்னம்மாள் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மாவட்ட போலீஸ் எஸ்பி யாதவ் கிரிஷ் அசோக் உத்தரவின்படி உடுமலை டிஎஸ்பி மேற்பார்வையில் உடுமலை இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீஸார் திருடனை கண்டுபிடிக்க தீவிரமாக விசாரித்து வந்த நிலையில், நேற்று மதியம் உடுமலை ராஜாவூர் பிரிவு அருகே இன்ஸ்பெக்டர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த வழியாக சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தில் வந்த ஒருவர் போலீசை கண்டதும் தப்பிச் செல்ல முயன்றார். அப்போது அவரை துரத்தி பிடித்து விசாரிக்கையில் அவர் ஈரோட்டை சேர்ந்த புறா கார்த்தி (எ) கார்த்தி என்பதும், இவர் தான் சின்னம்மாளிடம் தங்க சங்கிலியை பறித்தவர் என்பதும் தெரிய வந்தது.

தொடர்ந்து போலீசார் கார்த்தியை கைது செய்து அவரிடமிருந்து சுமார் 5 பவுன் தங்க சங்கிலியை பறிமுதல் செய்தனர். இரு சக்கர வாகனத்தையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்காக கோவை மத்திய சிறையில் அடைத்தனர். புறா கார்த்தி (எ) கார்த்தி மீது பல்வேறு மாவட்ட போலீஸ் நிலையங்களில் ஏற்கனவே திருட்டு உள்ளிட்ட சுமார் 16 குற்ற வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

வளர்ச்சி திட்ட பணிகளுக்கு எம்பி அடிக்கல்

▶ சின்ன பாப்பனூத்து ஊராட்சியில் கான்கிரீட் சாலை அமைக்க ஈஸ்வரசாமி எம்பி, திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். அருகில் முன்னாள் எம்எல்ஏ ஜெயராமகிருஷ்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

உடுமலை, மே 31: உடுமலை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது. பொள்ளாச்சி எம்பி ஈஸ்வரசாமி, மாவட்ட திமுக

செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் தலைமை வகித்து பணிகளை துவக்கி வைத்தனர். காரத்தொழுவு ஊராட்சியில் ரேசன் கடை கட்டிடம், கான்கிரீட் சாலை அமைத்தல், கதிரடிக்கும் களம் அமைத்தல், ஜோத்தம்பட்டி ஊராட்சி ஸ்ரீராமபட்டணத்தில் ரேசன் கடை கட்டிடம், கதிரடிக்கும் களம் அமைத்தல், கான்கிரீட் சாலை அமைத்தல், குமரலிங்கம் பேரூராட்சியில் தார் சாலை அமைத்தல், மானுப்பட்டி ஊராட்சியில் கான்கிரீட் சாலை அமைத்தல், அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல், போடிப்பட்டி ஊராட்சியில் விவசாய சேமிப்பு கிடங்கு, கான்கிரீட் சாலை, அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல், ராகல்பாவி ஊராட்சியில் கான்கிரீட் சாலை அமைத்தல்,

அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல், பெரியபாப்பனூத்து ஊராட்சியில் அங்கன்வாடி கட்டிடம், சமத்துவ மயானம் மேம்பாடு, ராவணாபுரம் ஊராட்சியில் ரேசன் கடை கட்டிடம், விவசாய சேமிப்பு கிடங்கு, தேவனூர்புதூர் ஊராட்சியில் அங்கன்வாடி கட்டிடம், கான்கிரீட் சாலை, சமத்துவ மயானம் மேம்பாடு ஆகிய

பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மொத்தம் ரூ.4 கோடியே 42 லட்சத்து 94 ஆயிரம் மதிப்பிலான 35 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் முன்னாள் எம்எல்ஏ ஜெயராம கிருஷ்ணன், ஒன்றிய

செயலாளர்கள் செந்தில்குமார், சாகுல்அமீது, மெய்ஞானமூர்த்தி, செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாபு, ராமசாமி, ஒன்றிய முன்னாள் தலைவர் மகாலட்சுமி முருகன், முன்னாள் துணைத்தலைவர் சண்முகவடிவேலு, முன்னாள் கவுன்சிலர் ரங்கநாதன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், கோழிக்கடை முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செல்போனை பறித்து சென்ற வாலிபர் கைது

▶ மனோஜ்.

தாராபுரம், மே 31: திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் சாலையில் செல்போன் பேசி நடந்து செல்பவரை குறிவைத்து செல்போனை மர்ம நபர் பறித்து செல்வதாக புகார்கள் வந்தன. அதன்பேரில், தாராபுரம் குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜயசாரதி தலைமையில் கதிரேசன், கோவிந்தராஜ், கிரிசரவணன் ஆகியோர் அடங்கிய போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

தொடர்ந்து மடத்துக்குளம் தாலுகா உடையார்பாளையம் கிராமத்தை சேர்ந்த மனோஜ் (20) என்பவரை பிடித்து விசாரணை நடத்தினர். அதில், செல்போன் வழிப்பறி செய்தது மனோஜ் என தெரிய வந்தது. பின்னர், அவரை கைது செய்த போலீசார் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தாராபுரம் கிளை சிறையில் அடைத்தனர்.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச்சொத்துக்களை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 15 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட். (TCHFL) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்ட, TCHFL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது'** மற்றும் 'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 03.07.2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 03.07.2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024 இடத்தில் 02.07.2025 அன்று மாலை 5.00 மணி வரை அல்லது அதற்கு முன்பாக TCHFL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்ப வேண்டும்.
கீழே விவரிக்கப்பட்டுள்ள சுருக்க விவரங்களின்படி கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்தானது ''உள்ளது உள்ளவிடத்தில்'' எனும் நிபந்தனையின் மூலம் விற்பனை செய்யப்ப உள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	தேதிப்படி நிலுவைத் தொகை
02	TCHHL080600010009 3009 & TCHIN080600010009 3071 & TCHIN047 9LO00010 0157827	திருமதி புவனேஸ்வரி N, M/S பவித்ரா மளியோடை, திரு. நாகராஜ் K	TCHIN0806000100093071 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.64,946/– மற்றும் TCHHL0806000100093009 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.25,83,244/–, TCHIN–0479LO000100157827 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2,81,254/–, மொத்தம் ரூ.29,29,444/– 14.08.2024	ரூ. 40,05,160/– (ரூபாய் நாற்பது லட்சத்து ஐந்தாயிரத்து நூற்று அறுபது மட்டும்)	ரூ. 4,00,516/– (ரூபாய் நான்கு லட்சத்து ஐந்நூற்று பதினாறு மட்டும்)	கையக	TCHHL0806000100093009 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.3008190/– மற்றும் TCHIN0806000100093071 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.122377/–, TCHIN–0479LO000100157827 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.357591/–, மொத்தம் ரூ.3488158/– 26.05.2025 தேதிப்படி
04	TCHHF080600010019 2935 & TCHHL080600010019 2637 & TCHIN080600010019 3702	திருமதி கலாவதி பாலசுப்பிரமணி, M/S. அக்செஞ்ச்சர் டேட்டா வொர்க் ராயல் செட்டிநாடு, திரு. சுஜித்	TCHHF0806000100192935 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.17,67,858/– மற்றும் TCHHL0806000100192637 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2,52,850/–, TCHIN0806000100193702 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.97,294/–, மொத்தம் ரூ.21,18,002/– 09.01.2025	ரூ. 27,95,600/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்)	ரூ. 2,79,560/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து ஐந்நூற்று அறுபது மட்டும்)	கையக	TCHHF0806000100192935 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1869225/– மற்றும் TCHHL0806000100192637 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.274778/–, TCHIN0806000100193702 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.104956/–, மொத்தம் ரூ.2248959/– 26.05.2025 தேதிப்படி
06	TCHHF047900010014 9344 & TCHIN047900010015 2315	திரு. ரகுபதி R M/S. அருணாச்சலா பிரிண்டிங் திருமதி சரண்யாதேவி R	TCHHF0479000100149344 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.45,62,632/–, TCHIN0479000100152315 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2,72,941/–, மொத்தம் ரூ.48,35,573/– 07.10.2024	ரூ. 1,38,36,950/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தெட்டு லட்சத்து முப்பத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்)	ரூ. 13,83,695/– (ரூபாய் பதின்மூன்று லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)	கையக	TCHHF0479000100149344 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.5081789/–, TCHIN0479000100152315 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.310410/–, மொத்தம் ரூ.5392199/– 26.05.2025 தேதிப்படி

அசையா சொத்தின் விவரம்: சர்வே எண்: சர்வே எண் 396/2C2A1, வருவாய் பதிவேட்டின்படி சர்வே எண் 396/2C2A1, மனை எண்: மனை எண் 1 வடக்குப் பக்க பாகம், இடம் கிராமம், மாநகரம், பதிவு, துணை மாவட்டம் முதலானவற்றின் அமைவிட பெயர்: பொங்குபாளையம் கிராமம், திருப்பூர் வடக்கு தாலுகா, திருப்பூர் பதிவு மாவட்டம், ''அவினாசி சார்பதிவு அலுவலக வட்டாரம்'', ''ஸ்ரீ சக்தி கார்டன்''. நிலத்தின் 1564 சதுர அடிக்கான **எல்லைகள்: வடக்கில்:** 40 அடி அகலமுள்ள ஊராட்சி சாலை, **தெற்கில்:** மனைஇட எண் 53, 54, **கிழக்கில்:** 23 அடி அகலமுள்ள தெற்கு வடக்கு லேஅவுட் சாலை, **மேற்கில்:** 40 அடி அகலமுள்ள ஊராட்சி சாலை. **அளவீடு விவரங்கள்:** வடக்கு–கிழக்காக மேற்கில் 54 அடி, கிழக்குத் தெற்காக வடக்கு குறுக்கில் 67 அடி, தெற்கு–கிழக்காக மேற்கில் 8–1/4 அடி, மேற்குத் தெற்காக வடக்கில் 52 அடி, 1564 சதுர அடி. இத்துடன் அனைத்து புழக்க உரிமைகள் மற்றும் வழிப்பாதை உட்பட

அசையா சொத்தின் விவரம்: ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை சார்பதிவு மாவட்டம், பெருந்துறை தாலுகா, புத்தூர் புதுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பழைய காசா எண் 213, மறுசர்வே எண் 267/P, புஞ்சை ஹெக்.5.39.5, கிஸ்தி 14.94, மறுசர்வே எண் 267/1, மொத்தப் பரப்பளவு புஞ்சை ஏக்கர் 5.28 சென்ட் 23 அடி மற்றும் 30 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்காக மற்றும் தெற்கு–வடக்காக அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் இந்த நிலங்கள் 04.05.2017 (ma) 13.10.20217 தேதியிட்ட தமிழ்நாடு மனை வரன்முறை (ஆணை எண் 78 (Ma) 172 வீட்டுவசதி வாரியம் மற்றும் நகர்ப்புற தொகுதி மேம்பாட்டு திட்டம் (Na.Va4a(3) துறை ஆகியவற்றின் கீழ் ''ஓம் சக்தி நகர்'' என்ற பெயரில் வீட்டு மனைஇடமாக பிரிக்கப்பட்டது, 17.07.2019 தேதியிட்ட கோப்பு எண் 12987/2018, Sema–3–இன்கீழும், Ma.va./ma(se).எண் 818/2019, மனை ஒழுங்குமுறை எண் 671/2019 ஆகியவற்றின் கீழும் மற்றும் தொகுதி மேம்பாட்டு அலுவலரால் வழங்கப்பட்ட (ki.Uu) 01.11.2019 தேதியிட்ட தீர்மான எண் 2156/2019/A1–இன்கீழும் நிலத்தில் பூங்கா மற்றும் சாலை அமைக்கப்பட்டதற்கு ஒப்புதல்பெற்று, இதிலடங்கிய வீட்டு மனைஇட எண் 80, பரப்பளவு 1928 சதுர அடி (அல்லது) 179.12 சதுர மீட்டர் கொண்ட வீட்டு மனைஇடம். **எல்லைகள் பின்வருமாறு: மேற்கில்:** வீட்டு மனைஇட எண் 79, **கிழக்கில்:** வீட்டு மனைஇட எண் 82, **தெற்கில்:** மறுசர்வே எண் 267/பாகம், **வடக்கில்:** 23 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்கு மனைச் சாலை. மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 30.0' அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 30.0' அடி, தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் 64.9' அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 63.9' அடி.
மொத்தப் பரப்பளவு 1928 சதுர அடி (அல்லது) 179.12 கொண்ட வீட்டு மனைஇடம். இத்துடன் வழக்கமான வழிப்பாதை, பொதுச் சாலை, பொது உரிமைகள் முதலானவை சேர்த்து. இந்தச் சொத்து புதிய உட்பிரிவு மறுசர்வே எண் 267/1A, தற்போதைய புதிய உட்பிரிவு மறுசர்வே எண் 267/1A1A1–இல் அமைந்துள்ளது. இந்தச் சொத்து பிச்சாண்டாம்பாளையம் ஊராட்சி எல்லைக்கு உட்பட்டது.

அசையா சொத்தின் விவரம்: அட்டவணை II சொத்து: ஆவண எண் 10394/2016–இன்படி, சர்வே எண் 586, வருவாய் பதிவேட்டின்படி TS எண் 2, பிளாக் எண் 117, வார்டு–E, மொத்தப் பரப்பளவு 2091 சதுர அடி, கதவு எண் (சொத்து வரி ரசீதுப்படி) ஏதுமில்லை.
இடம் கிராமம், மாநகரம், பதிவு, துணை மாவட்டம் முதலானவற்றின் அமைவிட பெயர்: அருள் ஜோதி நகர், எண் 14, தொட்டிப்பாளையம் கிராமம், திருப்பூர் 641607. நிலத்தின் 2091 சதுர அடிக்கான **எல்லைகள்: வடக்கில்:** சரோஜினி நிலம், **தெற்கில்:** 10 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்குச் சாலை, **கிழக்கில்:** 10 அடி அகலமுள்ள தெற்கு–வடக்குச் சாலை, **மேற்கில்:** பாப்பாப்பநாயக்கர் நிலம். **அளவீடு விவரங்கள்:** வடக்கு கிழக்காக மேற்கில் 46 அடி, கிழக்கு தெற்காக வடக்கில் 46 அடி, தெற்கு கிழக்காக மேற்கில் 77 அடி, மேற்கு தெற்காக வடக்கில் 34 அடி, 2091 சதுர அடி. இத்துடன் அனைத்து புழக்க உரிமைகள் மற்றும் வழிப்பாதை உட்பட.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப் புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.
விற்பனையானது கடனீட்டுச்சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்.
குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://bankauctions.in/ வலைதளம் மூலம் 03.07.2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1) இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்கமாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூஸல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். 2) அசையாச்சொத்து நிர்ணயவிலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது. 3) ஏலம் உயர்த்தும் தொகை **ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)** ஆகும். 4) சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் ''டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.'' பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5) உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை